[29th April 1959

SRI P. G. MANICKAM : ஒவ்வொரு தாலூகாவிலிருந்தும் எத்தனை கிராமங்களில் பள்ளிக்கூடங்கள் திறக்கப்பட வேண்டுமென்று சர்க்காருக்கு மனுக்கள் அனுப்பப்பட்டும்கூட, மற்ற இடங்களில் பள்ளிகள் திறக்கப்படாததற்கு காரணம் யாது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்பொழுது 500 ஜனத்தொகை உள்ள கிராமங்களிலெல்லாம் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தவேண்டுமென்று, அநேகமாக எல்லா கிராமங்களிலும் அம்மாதிரி ஏற்பாடு ஆகிவிட்டது. சென்ற ஆண்டில் 300 ஜனத்தொகை உள்ள கிராமங்களிலும் பள்ளிகள் வைக்கலாம் என்று சொல்லப்பட்டது. ஆனால், அது இன்னும் முடிவு ஆகவில்லை.

Red Cross Centenary Exhibition

*237 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of SRI A. A. RASHEED: Will the Hon. the Chief Minister be pleased to state whether the Government have taken stalls in the Red Cross Centenary Exhibition proposed to be held in Madras and the total expenditure proposed to be incurred in that connection?

THE HON. SRI C. SUBRAMANIAM: Yes, Sir.

It is proposed to incur an expenditure of Rs. 1,49,000.

SRI K. SATTANATHA KARAYALAR : பல கண்காட்சிகளில் வருடாவருடம் சர்க்கார் பங்கு கொள்வதினால், அப்படி கண்காட்சிகளில் நிரந்தரமாகப் பங்கு கொள்ளுவதற்கு தனியாக உத்தியோகஸ்தர்களை நியமிப்பதற்கு, நிரந்தரமாக ஒரு மெஷினரியை ஏற்படுத்துவதற்கு எதாவது சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதற்காக தனிப்பட்ட அதிகாரிகளை நியமிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அது பரிசீலனையில் இருக்கிறது.

Appalam and Vermicelli Units

*238 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) இரயில்வே போலீஸ்காரர்கள் குடும்பங்களின் வருமானத்தைப் பெருக்குவதற்கு வசதியாக இருக்கும் பொருட்டு, அப்பளம், சேமியா தயாரிப்பு ஸ்தாபனம் ஒன்றை நிறுவுவது பற்றி அரசாங்கம் ஆலோசனை செய்து வருகிறதா ?

(ஆ) அவ்வாறு ஆலோசனை செய்யப்படின் எந்தெந்த இடங்களிலே இந்த ஸ்தாபணம் நிறுவப்படும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI P. G. MANICKAM : போலீஸ்காரர்களின் குடும்பத்தின் வருமானத்தை உயர்த்த, அவர்களுடைய எதிர்கால நல்வாழ்வுக்காக, பின்னல், தச்சு போன்ற வேறு எதாவது கைத்தொழில்களை சொல்லிக் கொடுத்து அவர்களுக்கு உதவி செய்வதற்கு சர்க்காரிடம் திட்டம் இருக்கிறதா ?